**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.85/2006**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 22.10.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலசுப்ரமணியன் | Father's Name | : ராமசாமி |
| Village | : | Taluk | : ஆத்தூர் |
| Calling | : | Age | : 64 |

துவக்க நேரம்: 05.08 P.M.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1) நான் பிறந்த ஊர் எந்த ஊர் என்றால் ஊனத்தூர். நான் அரசு பேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்தேன் என்றால் இல்லை நடத்துநராக பணிபுரிந்தேன். எனக்கு இரண்டு குழந்தைகள் என்றால் ஆமாம். வா.த. சா.ஆ.9-ல் ஆத்தூர் வட்டம், மேற்கு தெரு என்று உள்ளது என்றால் ஆமாம். இந்த ஆவணம் கடந்த 2005 முதல் 2009 வரையான ஆண்டுகளுக்கு கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம்.

2) எனக்கு எந்த வருடத்தில் முதல் குழந்தை பிறந்தது என்றால் 1987-ல் பிறந்தது. நான் ஆத்தூரில் கரிகாலன் என்பவரது வீட்டில் குடியிருந்தேன் என்றால் ஆமாம். எனது இரண்டு குழந்தைகளும் நான் கரிகாலன் வீட்டில் இருந்தபொழுதுதான் பிறந்தார்கள் என்றால் இல்லை. முதல் குழந்தை கரிகாலன் வீட்டில் இருந்தபொழுது பிறந்தது.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.85/2006, Dt.22.10.2024.

3) தாவா சொத்தின் ச.எண். தெரியுமா என்றால் அளவு தெரியும். அளவு எவ்வளவு என்றால் கிழமேல் 46 -1/2 அடி தென்வடல் 30 அடி ஆகும். தாவா சொத்தை இரண்டு கிரைய ஆவணங்கள் மூலம் வாதி கிரையம் வாங்கினாரா என்றால் ஆமாம். இந்த கிரைய ஆவணங்களை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்தேன்.

4) என்னிடம் காட்டப்படும் ஆவணம் (வா.த.சா.ஆ.1) கடந்த 1986- ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் (வா.த.சா.ஆ.2) கடந்த 1991- ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். கடந்த 1986 தேதி கண்டுள்ள சொத்திற்கு தென்புறத்தில் ஒரு சந்து செல்கிறது என்றால் ஆமாம். அந்த சந்திற்கு வடக்கில் உள்ள சொத்து தான் தாவா சொத்து என்றால் அதுவும் தென்புறத்தில் உள்ள ஒரு வீடும் தாவா சொத்துக்கள்.

5) வாதி எத்தனை அடி நீள, அகலத்தில் வீட்டின் பின்புறம் புழக்கடைக்காக விட்டுள்ளார் என்றால் சுமார் 500 சதுர அடி இருக்கும். வாதி கணவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் ஈ.பி.-ல் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். வாதியும், அவரது கணவரும் வெளியில் தங்கி வேலை செய்தார்கள் என்றால் கடந்த 1987 முதல் 2000-ம் ஆண்டு வரை நான் அந்த வீட்டில்தான் குடியிருந்தேன். நான் வந்த பிறகு உடனே வாதியும், அவரது கணவரும் அந்த வீட்டிற்கு வந்துவிட்டார்கள்.

6) வாதி எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை வாடகை வசூலிக்க வருவார் என்றால் மாதத்திற்கு ஒரு முறை வருவார். நான் அந்த வீட்டிலிருந்த காலகட்டத்தில் அந்த வீட்டிற்கான வரி ரசீதுகளை என் பெயரில் செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. அந்த வீட்டில் நான் உண்மையில் குடியிருந்திருந்ததால் என் பெயருக்கு வரி ரசீது செலுத்தியிருப்பேன் என்றாலும் நான் அந்த வீட்டில் இல்லாததால்தான் வரி

செலுத்தவில்லை என்றால் சரியல்ல அந்த வீட்டில்தான் இருந்தேன்.

7) 2-ம் பிரதிவாதி ராஜேந்திரன் வீடு மேற்கில் உள்ளதா என்றால் ஆமாம். 2-ம் பிரதிவாதி ராஜேந்திரன் வீட்டிற்கும், வாதி வீட்டிற்கும் இடையில் பொது சுவர் இருந்ததா என்றால் இல்லை. 2-ம் பிரதிவாதி ராஜேந்திரன் அவரது வீட்டிற்கு பின்னால் அவர் புழங்குவதற்கு காலியிடம் விட்டுள்ளார் என்றால் ஆமாம்.

8) கிணறு தூர்ந்து போய்விட்டதாக நான் சொல்லும் நிலையில் எந்த வருடத்தில் அவ்வாறு நடைபெற்றது என்றால் கடந்த 1998-ம் ஆண்டில் தூர்ந்து போய்விட்டது. நான் சொல்வது பொய் என்றாலும் கிணறு இன்றும் பயன்பாட்டில்தான் இருக்கிறது என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி ராஜேந்திரன் தாவா சொத்துக்கு அருகில் எந்த வருடத்தில் அவரது சொத்து கிரையம் வாங்கினார் என்றால் தெரியவில்லை.

9) நான் குடியிருந்து வந்ததற்கான சட்டப்படி ஏதேனும் ஒப்பந்த ஆவணம் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. வாய்மொழியாக ஒப்பந்தம் கூறியுள்ளேன். வழக்கு சொத்தில் நான் குடியிருந்ததில்லை என்றாலும் வழக்கிற்காக குடியிருந்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் உண்மையில் குடியிருந்து இருந்தால் ஒப்பந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 05.42 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal Distrit Munsif, Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.85/2006, Dt.22.10.2024.